**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO.24/2020**

| | |
|---|---|
| Name: திருநாவுகரசு | Caste: |
| Father's Name: கோபால்<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 12.01.2026 | |

**12.01.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 10.54 AM**

**வா.சா.2 – முதல் விசாரணை**

இவ்வழக்கில் நான் 3 ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பில் 2–வது சாட்சியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் 2 வது சாட்சி ஆவேன். நான் சித்தமல்லி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். இந்த வழக்யின் வாதியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்காரர் பக்கத்து கழனிகாரர் ஆவார். நானும் வாதியும் 8 ம் வகுப்புவரை பள்ளியில் ஒன்றாக படித்தோம். நான் 10 ம் வகுப்புவரை படித்துள்ளேன். அவருடைய தந்தையின் பெயர் நடராஜ பிள்ளை. அவரது தாத்தாவின் பெயர் முனுசாமி.

வாதி எந்த பிரச்சனைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதியின் உடன் பிறந்தவர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஒருவர் பெயர் ஆத்மா, மற்றொருவர் பெயர் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. வாதி மற்றும் அவர்களுக்கு ஒரு அக்கா உள்ளனர். ஆழ்துளை கிணறு யார் போட்டது என்றால் BDO அலுவலகத்தில் இருந்து போடப்பட்டது. அந்த ஆழ்துளை கிணறு யாருடைய இடத்தில் போடப்பட்டுள்ளது என்றால் வாதியின் பட்டா இடத்தில் ஆழ்துளை கிணறு போடப்பட்டது. மேற்படி ஆழ்துளை கிணறு சாலையின் அருகில் போடப்பட்டுள்ளதா என்றால் ஆஞ்சநேயர் கோயில் தெருவில் போடப்பட்டுள்ளது.

வாதியின் வீடு எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் வடக்கு பார்த்து உள்ளது. சுமார் எப்போது அந்த ஆழ்துளை கிணறு போடப்பட்டது என்றால் சுமார் 10 வருடதிற்கு முன்பு போடப்பட்டது. BDO அலுவலகம் மூலம் தண்ணீர் தொட்டியும் அதை இயக்குவதற்கான மின் இணைப்பும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மின் இணைப்பு எந்த அலுவலகத்தை சாரும் என்றால் களியாம்பூண்டி அலுவலகத்தை சார்ந்த இணைப்பாகும்.

வாதி என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் மேற்படி தண்ணீர் தொட்டியை அவருடைய இடதில் இருந்து நீக்கி அரசாங்க இடத்தில் கட்டவேண்டும் என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் சகோதரர்களுக்கு இடையே பாகம்பிரித்துக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சுமார் 7 முதல் 8 ஆண்டுகளுக்கு முன்பாகவே பாகம்பிரிக்கப்பட்டது. அதன் பின் அவரரவர் பெயர் பட்டா மற்றம் செய்யப்பட்டது. பாகப்பிரிவினைக்கு பிறகு தான் தாவா சொத்தில் ஆழ்துளை கிணறு போடப்பட்ட விவரமும் தண்ணீர்

தொட்டி வீட்டு வாசலில் இருக்கும் விவரமும் எனக்கும் வாதிதக்கும் தெரியவந்தது என்றால் சரிதான்.

தண்ணீர் பிடிப்பது தொடர்பாக அருகில் உள்ளவர்களுக்குளுக்கும் மனுதாரர் குடும்பத்திற்கும் வாக்குவாதம் ஏற்படுவது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இது தொடர்பாக வாதி காவல் நிலையத்திலும் ஆட்சியரிடமும், வட்டாட்சியர் இடமும், BDO அலுவலகத்திலும் மனு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். மனுதாரருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளார்கள்.

நான் சொல்வது தவறு என்றாலும் அரசாங்கத்தினால் அங்கு ஆழ்துளை கிணறு போடப்படவில்லை என்றாலும் அது அசேபா எனும் NGO தான் தண்ணீர் குழாய் மூலம் தண்ணீர் எடுப்பதற்காக அந்த ஆழ்துளை கிணறை போட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி NGO வில் வாதி பணியாற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் அளித்த மனுவின் பேரில் வாதியை DRO விசாரித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆழ்துணை கிணறு போட்டது வேறு ஒரு நிறுவனம் என்றாலும் தண்ணீர் தொட்டி வைத்தது தான் BDO அலுவலகம் என்றாலும் சரிதான்.

நான் வாதியுடன் படித்த நண்பர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தண்ணீர் தொட்டி இருப்பதினால் வாதிக்கு என்ன பிரச்சனை என்றால் தண்ணீர் தொட்டியில் இருந்து தண்ணீர் வழிந்து அவரது வீட்டு வாசலில் ஓடுவது வழக்கமாக உள்ளது. வாதி மேற்படி தண்ணீர் தொட்டியை அரசு நிலத்தில் மாற்றி கட்டுமாறு வேண்டியுள்ளார். DRO விசாரணையின் பிறகு தண்ணீர் தொட்டி இருக்கும் இடம் அரசாங்கத்திற்கு சொந்தமானது என பட்டா

மாற்றம் செய்யபபட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

வாதி அசேபா நிறுவனத்தில் பணியாற்றிய போது ஆழ்துளை கிணறு மற்றும் கைபம்பு போடப்பட்டதால் அவர் அதற்கு ஒப்புதல் தெரிவித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாகப்பிரிவினைக்கு பிறகு தாவா சொத்தின் பட்டா வாதியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்ட பிறகு தண்ணீர் தொட்டி வாதியின் பட்டா இடத்தில் இருக்கும் விவரம் தெரிந்துதான் வாதிஅதை எதிர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் வாதியின் பக்கத்து கழனிக்காரர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.21 AM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**